# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

முதலாம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 1st Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம்<br>Political Science | Three Hours<br>Gr -12 (2022) | 23 | T | I,II |

## பகுதி I

❖ ***1 – 10* வரையான வினாக்களுக்கு சரியான கூற்றுக்களின் சேர்மானத்தை தெரிவு செய்க.**

*01.* அரசியல் என்பதன் சரியான சேர்மானம்.

A – சமூக, பொருளாதார அரசியல் விவகாரங்களின் மீதான மோதும் நலன்களின் பெறுபேறாகும்.

B – மத விழுமியங்களின் தளத்தையுடைய சமூகமொன்றை உருவாக்குவது தொடர்பான அறம்சார் செயற்பாடாகும்.

C – அரசாங்கம் பற்றிய கலையும், விஞ்ஞானமுமாகும்.

D – அரசியல் விஞ்ஞானத்தின் நடைமுறைப்பகுதி என கருதப்படுகிறது.

E – விழுமியங்களை அதிகார பூர்வமாக பகிர்ந்தளிக்கும் வழிமுறையாகும்.

1) ABCE 2) ABCD 3) ACDE 4) ABDE 5) BCDE ( )

*02.* அரசியல் விஞ்ஞானம் என்பது.

A – ஒரு சமூக விஞ்ஞானமாகும்.

B – அறிவாதார முறையியலுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

C – சமூக விஞ்ஞான பாடங்களுள் மிகப் பழமையானது எனக் கருதப்படுகிறது.

D – கிரேக்கர் காலத்தில் முறையாகக் கற்பதற்கு ஆரம்பமாகியது.

E – நடத்தைவாத கருத்தியலுடன் தனித்துவமாய் வளர்ச்சியடைந்துள்ளது.

1) ABCE 2) ABCD 3) ACDE 4) ABDE 5) BCDE ( )

*03.* அரசியலைச் செய்தல் என்பது.

A – அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள செயற்படல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

B – தேர்தல்களில் பங்குபற்றல்.

C – அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளில் பங்குபற்றல்.

D – போராட்டம் மற்றும் எதிர்ப்பு இயக்கங்கள் போன்றவற்றில் பங்குபற்றல்.

E – அரசியல் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆய்வு செய்தல்.

1) ABCE 2) ABCD 3) ACDE 4) ABDE 5) BCDE ( )

*04.* மக்கள் ஏன் அரசாக ஒழுங்கமைந்துள்ளனர்?

A – சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை பாதுகாத்துப் பேணுவதற்காகும்.

B – சமூகத்தை ஆள்வதற்கான ஆட்சி முறைமையொன்றை ஒழுங்கமைப்பதற்காகும்.

C – தேசிய பாதுகாப்பைப் பேணிப் பாதுகாப்பதற்காகும்.

D – சமூகத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை முறையான பாங்கினில் ஒழுங்கமைப் பதற்காகும்.

E – மக்களின் இறைமையைப் பிரயோகிப்பதற்கான நெறிமுறைத் தன்மையினை வழங்குவதற்காகும்.

1) ABCE 2) ABCD 3) ACDE 4) ABDE 5) BCDE ( )

05. அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த சமூகமொன்றுக்கு அரசாங்கமொன்று ஏன் அவசியமாகின்றது?

A – சமூகப் பிணைப்பைப் பாதுகாத்து மேம்படுத்திப் பேணுவதற்காகும்.

B – சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு, சமூகநீதி ஆகியவற்றை வழங்கிப் பேணுவதற்காகும்.

C – மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்திப் பேணுவதற்காகும்.

D – பொருளாதாரச் செயற்றிறனை மேம்படுத்தி வெளியக உறவுகளை நிர்வகிப்பதற்காகும்.

E – சமூகத்தின் வறிய பகுதியினரின் நலன்களை மட்டும் பாதுகாத்து மேம்படுத்திப் பேணுவதற்காகும்.

1) ABCE 2) ABCD 3) ACDE 4) ABDE 5) BCDE ( )

06. அரசு என்பது

A – சமூக நிறுவனங்களில் மிக உயர்ந்த நிறுவனமாகும்.

B – தேசம் சமூகம் அரசாங்கம் என்பவற்றுடன் ஒத்ததாகின்றது.

C – நிலையான ஒரு ஆட்புலத்தில் வாழும் மக்களின் ஒரு கூட்டு ஆகும்.

D – வெளிவாரியான கட்டுப்பாடுகளுக்குட்படுவதில்லை.

E – ஒழுங்கமைந்த அரசாங்கத்தினூடாக தனது அதிகாரத்தை பிரயோகிக்கின்றது.

1) ABCE 2) ABCD 3) ACDE 4) ABDE 5) BCDE ( )

07. குடியுரிமை என்பது.

A – அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் ஒரு சட்ட நிலையாகும்.

B – ஒரு நாட்டில் வாழும் எல்லோருக்கும் உரித்தாகும். ஒரு சட்ட உரிமையாகும்.

C – பிறப்பினால் அல்லது பதிவினால் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு சட்ட அந்தஸ்தாகும்.

D – ஓர் அரசியல் ஜனசமூகத்தில் வாழும் பிரஜைகளுக்கு குறிப்பிட்ட தேசியத்துவத்தினை வழங்கும் ஒரு சட்ட விதிமுறையாகும்.

E – ஓர் அரசியல் சமூகத்தில் அதனை அனுபவிப்போருக்கு சமமானதும் முழுமையானதுமான உறுப்புரிமையை உத்தரவாதப்படுத்தும் ஒரு சட்ட அந்தஸ்தாகும்.

1) ABCE 2) ABCD 3) ACDE 4) ABDE 5) BCDE ( )

08. இறைமை என்பது.

A – சிறிய ஜீன்போடின் இக்கோட்பாட்டினை முன்வைத்தவர் ஆவார்.

B – பருமன் எதுவாயினும் சகல அரசுகளும் சமமான இறைமைதிகாரத்தை அனுபவிக்கின்றன.

C – அது அரசின் அதிகாரத்தை விளக்கும் கோட்பாடாகும்.

D – சிறிய அரசுகளை விடப்பெரிய அரசுகள் கூடுதல் இறைமையை அனுபவிக்கின்றன.

E – தற்காலத்தில் இறைமை இரண்டு வகைப்படுத்தப்படுகின்றது.

1) ABCE 2) ABCD 3) ACDE 4) ABDE 5) BCDE ( )

09. அரசியல் கட்சியினை ஏனைய அரசியல் குழு மற்றும் சமூக இயக்கங்களிலிருந்து வேறுபடுத்தும் பண்புகள்.

A – அரசாங்க அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் முயற்சியை மேற்கொள்கிறது.

B – அரசியல் அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதினை பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கும்.

C – அரசாங்கக் கொள்கைக்கு மாறான விடயங்களில் அவதானம் செலுத்தும்.

D – அங்கத்துவ அட்டைகளைக் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட பிரிவாகும்.

E – கொள்கை ரீதியிலான கருத்தியல் அடையாளங்கள் காணப்படல்.

1) ABCE 2) ABCD 3) ACDE 4) ABDE 5) BCDE ( )

10. அரசியல் கட்சி என்பது.

A – ஜனநாயக அரசியலில் தவிர்க்கப்பட முடியாத ஒரு அங்கமாகும்.

B – இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் 20ம் நூற்றாண்டின் மத்திய காலத்தின் பின் ஆரம்பமாகியது.

C – பிரதிநிதித்துவமுறை மற்றும் வாக்குரிமையில் பரவல் காரணமாக கட்சிகளின் பணிகள் முன்னிலை அடைந்தன.

D – தேர்தலை பிரதான ஊடகமாகக் கொண்டு அரசாங்கத்தின் அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கினை கொண்டமைந்துள்ளது.

E – 18ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தோற்றம் பெற்றது.

1) ABCE  2) ABCD  3) ACDE  4) ABDE  5) BCDE  (  )

❖ **11 – 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமற்ற விடையினைத் தெரிவு செய்க.**

11. சமூகவியல் அணுகுமுறை என்பது.
1) உளவியல், மானுடவியல் போன்றவற்றையும், சமூகவியல் அணுகுமுறையில் பயன்படுதப்படுகின்றது.
2) நடத்தைவாத அணுகுமுறையுடன் நெருங்கிய வகையில் தொடர்புபடுகின்றது.
3) சமூகச்செயற்பாடுகள் பற்றியும் மதம், கலாச்சாரம் போன்ற பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
4) கார்ள்மாக்ஸ், மக்ஸ்வெபர் இவ் அணுகுமுறையின் முன்னோடிகள் ஆவார்.
5) சமூகவியலை அரசியலுடன் நெருங்கிய வகையில் தொடர்புபடுத்தி ஆராய்கின்றது.

(  )

12. பெண்ணியல் வாத அணுகுமுறை என்பது.
1) பொதுவுடமைவாதம் மற்றும் லிபரல் வாதத்தினை இவ்வணுகுமுறை கேள்விக் குட்படுத்துகின்றது.
2) தனியாள் பங்குபற்றும் அரசியல் நடைபெறும் முக்கிய செயன்முறை என்பதனை ஏற்றுக்கொள்கின்றது.
3) அரசியல் தொடர்பாக முன்வைக்கப்படும் எண்ணக்கருக்களின் பால்நிலை என்பது மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.
4) அரசியல் எண்ணக்கருவினை விருத்தி செய்துள்ளது.
5) 1980 களின் பின்பு பெண்ணியல் வாதக்கருத்தியலுடன் தோற்றம் பெற்றது. (  )

13. பண்மைத்துவ அணுகுமுறை அரசறிவியலுக்கு தேவைப்படுவதற்கான காரணங்கள்.
1) அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக ஏனைய பாடப்பரப்புடன் தொடர்புபட்டு ஆராயப்படுகின்றது.
2) கிரேக்கயுகத்தில் தத்துவத்துடன் இணைந்து கற்பிக்கப்பட்டது.
3) ஏனைய பாடத்துறைகளுடன் மிகக் குறைந்த அளவில் தொடர்புபடுகின்றது.
4) கோட்பாடுகள் விதிமுறைகள் போன்றவற்றை ஏனைய பாடப்பரப்புடன் இணைந்து ஆராய்கின்றது.
5) ஏனைய கற்கைத்துறையுடன் தொடர்பு அற்றதாகக் காணப்படுகின்றது. (  )

14. அரசியல் பொருளாதார அணுகுமுறை என்பது.
1) மாக்ஸிசவாதக் கோட்பாட்டு அணுகுமுறையாக அடையாளப்படுத்தப்படுகின்றது.
2) வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்னும் இவ்வணுகுமுறை அடையாளப்படுத்தப்படுகின்றது.
3) சமூக ஒழுங்கமைப்பினை இரண்டு தளங்களில் ஆராய்கின்றது.
4) அரசியல் பொருளியல் என்ற எண்ணக்கரு 16ம் நூற்றாண்டில் ஐரோப்பிய சிந்தனையாளர்களினால் பயன்படுத்தப்பட்டது.
5) பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அரசியலை ஆராய்கின்றது.

(  )

15. அரசியலில் ஆராயப்படும் தலைப்புக்களில் உள்ளடங்காதது.
   1) மனிதர்களுக்கிடையிலான சமூக உறவுகளை ஆராய்கின்றது.
   2) மனிதர்களின் அரசியல் நடத்தையை ஆராய்கின்றது.
   3) பொதுக்கொள்கை மற்றும் பொது நிர்வாகத்தை ஆராய்கின்றது.
   4) அரசியல் முறைமையின் கட்டமைப்புக்களையும் பணிகளையும் ஆராய்கிறது.
   5) அரசியல் முறைமையின் செயன்முறையினை ஆராய்கிறது. (   )

16. நவீன அரசு ஒன்றின் ஆள்புல அங்கங்களில் அடங்காதது.
   1) வரையறுக்கப்பட்ட ஆள்புலப்பிரதேசம்
   2) தேசிய அடிப்படை.
   3) அரசியல் யாப்பு.
   3) அரசாங்கம்.
   5) இறைமை (   )

17. பாஸிஸவாத அரசு என்பது.
   1) அரசு சர்வவல்லமை பொருத்திய தாபனம் ஆகும்.
   2) அரசு என்பது தனிமனித நலனை முதன்மைப்படுத்துகின்றது.
   3) முசோல்னியும் கிட்லரும் இவ் அரசு முறையை தோற்றுவித்தவர்களாவார்.
   4) அரசின் படைப்பே ஆட்சியாளன் ஆவான்.
   5) நாயகர் வழிபாட்டினை வெளிக்காட்டுகின்றது. (   )

18. முடியாட்சிமுறை அரசு.
   1) மக்கள் மேலானவர்களாக முதன்மைப்படுத்தப்பட்டனர்.
   2) பரம்பரையாக உரிமைகோரும் ஆட்சிமுறை ஆகும்.
   3) உலகம் முழுவதும் கண்டுகொள்ளப்பட்ட ஆரம்பகால அரசு மாதிரியாகும்.
   4) அரசன் / அரசி ஆட்சிக்குவருவது சம்பிரதாயப்படியாகும்.
   5) எல்லையற்ற அதிகாரம் காணப்படுகிறது. (   )

19. கோத்திர அரசு என்பது.
   1) அரசியல் என்ற ஆட்சி அதிகாரங்கள் சமூகத்தினுள் பரந்து காணப்பட்டது.
   2) பலமிக்க நபர்களால் ஆட்சி தீர்மானம் எடுக்கும் குழுமுறை தோற்றம் பெற்றது.
   3) தலைவருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரம் கிடைத்தது.
   4) தலைமைத்துவம் பரம்பரையாக வழங்கப்பட்டது.
   5) அரசியல் அதிகாரம் குழுவினுள் சிரேஸ்ட தன்மையினுள் உருவாக்கப்பட்டது. (   )

20. நவதாரண்மைவாத அரசு.
   1) பொருளாதார பின்புலம் அரசியல் பின்புலத்தை கொண்டுள்ளது.
   2) தேசிய அரசுகள் தேசிய எல்லைகளைக் கடந்து பரவலடைந்துள்ளது.
   3) இவ் அரசு முறை ஆனது தலையிடா அரசு முறைமையினை வலியுறுத்தியது.
   4) நலன்புரி அரசு, குறைந்தபட்ச அரசு முறைமை தோற்றம் பெற்றது.
   5) இவ்வரசு முறை பற்றி கருத்தினை ரொபட் நோகிக், பெட்றிக்வோன் போன்றோர் முன்வைத்துள்ளனர். (   )

❖ ***20 – 25 வரையிலான ஒவ்வொரு வினாவும் இரண்டு கூற்றுக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்கு பின்வரும் அட்டவணை 1 இற்கான வழிகாட்டியிலுள்ள (1), (2), (3), (4), (5) என்பவற்றுள் எந்த விடை பொருந்துகிறது என்பதைக் குறிப்பிடுக.***

**அட்டவணை 1 இற்கான வழிகாட்டி**

| இலக்கம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1) | உண்மை | உண்மை |
| 2) | உண்மை | பொய் |
| 3) | பொய் | உண்மை |
| 4) | பொய் | பொய் |
| 5) | உண்மை | உண்மை என்பதுடன், முதலாவது கூற்றைத் தெளிவாக விளக்குகிறது. |

**அட்டவணை 1**

| இல | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 21. | அரசியல் கோட்பாடு என்பது சமூகத்தில் நடைபெறும் தோற்றப்பாடுகள் எவ்வாறு ஏற்படுகின்றது என்பதனை விபரிப்பதற்கு பயன்படுத்தும் விதிமுறைகளுக்கான கருவியாகும். | அரசியல் கோட்பாடு என்பதற்கு இரண்டு விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. ( ) |
| 22. | சமூகத்தில் காணப்படும் நிறுவனங்களை முறைசார் மற்றும் முறைசாரா நிறுவனங்கள் என வகைப்படுத்தலாம். | அரசியல் நிறுவனங்கள் முறைசாரா நிறுவனங்களில் உள்ளெடுக்கப்படுகிறது. ( ) |
| 23. | அரசியல் தத்துவம் கிரேக்க காலம் தொடக்கம் இன்றுவரை அரசறிவியலில் முக்கியமான பாடப்பரப்பாக காணப்படுகிறது. | 20ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் மின்னிநிலை அடைந்தபோதிலும் 1970 களில் மீண்டும் எழுச்சி அடைந்தது. ( ) |
| 24. | அரசியலும் அரசியல் விஞ்ஞானமும் வேறுபட்ட இரு பிரிவுகளாகும். | அரசியலும் அரசியல் விஞ்ஞானத்துக்கும் இடையில் தொடர்புகள் காணப்பட்ட போதிலும் வேறுபாடுகள் காணப்படுவதில்லை. ( ) |
| 25. | பின் காலணித்துவ அரசியல் முறை என்பது ஹம்சா அலாவி என்பவரால் முன்வைக்கப்பட்ட எண்ணக்கருவின் விளைவாகும். | பின் காலணித்துவ அரசு முறையினை பாகிஸ்தான் மற்றும் பங்கலாதேஸ் சமூகங்களின் அரச பின்காலணித்துவ என்ற கட்டுரையின் மூலம் முக்கியத்துவம் பெற்றது. ( ) |

## குறு வினா

01. "அரசியல்" என்பது புராதன நகர அரசோடு தொடர்புடையது என்ற கிரேக்க கருத்தில் இரு அர்த்தங்கள் உள்ளன. அவற்றினை குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

02. பின்வரும் நூல்களை எழுதிய அரசியல் சிந்தனையாளர்கள் யாவர்.

1) குடியரசு - ……………………………………………………………………………………

2) அரசியல் - ……………………………………………………………………………………

03. பின்வரும் அரசியல் எண்ணக்கருக்களுடன் தொடர்புபட்டவர்கள் யாவர்?

1) இலட்சிய அரசு - ……………………………………………………………………………

2) பொதுச் சித்தம் - ……………………………………………………………………………

04. அரசியல் கோட்பாடுகள் இரு வகைப்படும். அவை எவை?

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

05. 1) "தேர்தல் அல்லது வேறு ஊடகத்தின் ஊடாக அரசாங்க அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கினைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமாகும்."

1) "குழுவாக ஒன்றிணைந்து சட்டம், அரசு, கொள்கை, அரசுத்தீர்மானங்கள் போன்றவற்றுக்கு அழுத்தம் கொடுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட பிரசைகள் குழுவாகும்."

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுக்கான அரசியல் நிறுவனங்களைப் பெயரிடுக.

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

.

06. அரசு சமூக நிறுவனங்களில் மேலான நிறுவனம் என்பது தொடர்பாக கருத்துக்களை முன்வைத்த இரண்டு சிந்தனையாளர்களின் பெயர்களைத்தருக.

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

07. கிரேக்க நகர அரசுக்கு உரித்தான இரு கருத்துக்கள் காணப்படுகின்றன. அவை எவை?

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

*08. 1)* "இனத்தின் சிருஷ்டியே அரசாகும்"

*1)* "வர்க்க நலன் பேணும் கருவியே அரசாகும்" மேற்கூறப்பட்ட கூற்றுக்களை கூறியவர்களின் பெயரைத் தருக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

*09.* இறைமையின் *2* வகைகளைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

*10.* ஒப்பீட்டு அரசியலுக்கான அடிப்படை எனும் கட்டுரையை எழுதிய இரு அறிஞர்களையும் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(10X1=10 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பின்வரும் வினாக்களில் இருந்து இரண்டு வினாக்களை மாத்திரம் தெரிவு செய்து எழுதுக.**

*01. அரசறிவியலைக் கற்பதற்கான பின்வரும் அணுகுமுறைகளில் இரண்டினை விபரிக்குக.*

- i) இலட்சியவாத அணுகுமுறை *(10 புள்ளிகள்)*
- ii) விஞ்ஞானபூர்வ அணுகுமுறை *(10 புள்ளிகள்)*
- iii) ஒப்பீட்டு அணுகுமுறை *(10 புள்ளிகள்)*

(2x10=20 புள்ளிகள்)

*02. பின்வருவனவற்றில் இரண்டினை பரிசீலிக்குக.*

- i) அரசும் அரசாங்கமும் *(10 புள்ளிகள்)*
- ii) அரசியல் கட்சிகள் *(10 புள்ளிகள்)*
- iii) சிவில் சமூகம் *(10 புள்ளிகள்)*

(2x10=20 புள்ளிகள்)

*03. அரசு என்பதை வரைவிலக்கணப்படுத்தி அதன் வகிபாகத்தினை விளக்குக.*

*(20 புள்ளிகள்)*

*04. பின்வருவனவற்றில் இரண்டினை ஆராயய்க.*

- i) தாராள ஜனநாயக அரசு
- ii) சமவுடமைவாத அரசு
- iii) காலணித்துவ அரசு

(2x10=20 புள்ளிகள்)

*05. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.*

- i) அரசியல் கற்கையும் அரசியல் பிரிவுகளும்.
- ii) அரசும் இறமையும்.
- iii) அரசும் பிரஜையும்
- iv) அரசின் இயல்பு தொடர்பான சமூக ஒப்பந்தவாதம்

(2x10=20 புள்ளிகள்)